வேண்டுமென்பதற்காக கடந்த எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவிற்கு, போற்றுதலுக்குரிய நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் மீனவர்களுக்கு அடையாள அட்டையை அரசாங்கச் செலவினிலே வழங்கியிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலே, இதுபோன்று மீனவர்கள் அடையாள அட்டையை முழுவதுமாக வாங்கி விட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

69—

ஆலம்பாடியில் கண்ணாடி தொழிற்சாலை அமைத்தல்

33527*–செல்வி கோ. மல்லிகா:**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) புவனகிரி ஒன்றியம், ஆலம்பாடி கிராமத்தில் கண்ணாடி தொழிற்சாலை ஒன்று கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): புவனகிரி ஒன்றியம், ஆலம்பாடி கிராமத்தில் கண்ணாடி தொழிற்சாலை ஒன்று கட்ட, இத்துறையைப் பொருத்தவரை அரசிடம் செயற்குறிப்போ அல்லது திட்டமோ ஏதுமில்லை. இது சம்பந்தமாக தொழில் முனைவோர் யாராகிலும் முன்வருவார்களேயாயின், இத்துறையிலிருந்து சம்பந்தமான உதவிகள் அனைத்தும் வழங்கப்படும்.

73—

வேதாரண்யம் தொகுதியில் சத்துணவு மையங்கள் அமைத்தல்

25108*—திரு பி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடப்பு கல்வியாண்டில் வேதாரண்யம் தொகுதியில் புதிதாக துவங்கப்பட்டுள்ள ஆயக்காரன்புலம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும், தேத்தாகுடி அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் தனித்தனியாக சத்துணவு மையங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?